மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு ஜூலை திங்கள் 08ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.01/2021
உள்
அசல் வழக்கு எண்.22/2021

-------------

வெ.பெருமாள்சாமி ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிர்/

முத்துப்பாண்டி மற்றும் ஒருவர் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு 10.11.2021ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 30.06.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுதாரர்/1ம் பிரதிவாதி மீது 30.04.2021ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 10.11.2021ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

வாதிகள் தாவா சொத்தை அவர்கள் பாதையாக அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்யாமல் இருக்கும்படி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து சங்கரபாண்டியபுரம் கிராமத்திற்கு வழக்கு சமன் வாதிகளால் அனுப்பப்பட்டது. மனுதாரர் கடந்த 10 ஆண்டு காலமாக கோயம்புத்தூரில் குடும்பத்துடன் தங்கி வேலை செய்து வந்துள்ளார். அதனால் மனுதாரருக்கு வந்த சம்மனை மனுதாரர் சகோதரன் தகவல் கூறியபோத மனுதாரர் உடல்நலக்குறைவு காரணமாக எங்கும் வெளியில் செல்ல இயலாத நிலையில் இருந்து வந்துள்ளார். தாவா சொத்தில் மனுதாரருக்கு மட்டும் பாத்தியம் இருந்து வரவில்லை. மனுதாரர் சகோதரர்களுக்கும் பாத்தியம் இருந்து வருகிறது. மனுதாரர் வெளியூரில் இருந்து வருவதை தெரிந்து கொண்ட மனுதாரருக்கு மட்டும் வேண்டுமென்றே மனுதாரர் ஊர் விலாசத்திற்கு சமன் அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் உடல்நலக்குறைவாக இருந்த காரணத்தால் 30.04.2021ம் தேதியில் ஆஜராக இயலவில்லை. அதனால் மனுதாரரை அழைத்து மனுதாரர் ஆஜராகாத காரணத்தால் மனுதாரர் மீது எக்ஸ்பார்ட்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் 30.04.2021ம் தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே மனுதாரர் மீது 30.04.2021ம் தேதியில் பிறப்பித்த எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 10.11.2021ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-**

தாவா மனுவில் மனுதாரர் உடல்நலக்குறைவாக இருந்த காரணத்தினால் ஆஜராக இயலவில்லை என்று கூறியுள்ளார். எனினும் உடல்நலக்குறைவாக இருந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரர் வேண்டுமென்றே தாவா வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்று தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மனுவை அனுமதிக்கும்பட்சத்தில்

எதிர்மனுதாரருக்கு வீண் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவதாய் உள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.
5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.
6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7). தீர்வு:-</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் மனுதாரர்/1ம் பிரதிவாதி மீது 30.04.2021ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 10.11.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டத்திற்கும் ஆளாகக் கூடும். எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது. இருப்பினும் இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரையம் மற்றம் இதர விரையங்களை கருத்திற்கொண்டு மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/ஐ செலவு தொகையாக வரும் 20.07.2022ம் தேதியன்றோ அதற்கு முன்பாகவோ

செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 20.07.2022

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மனுதாரர்/1ம் பிரதிவாதி மீது 30.04.2021ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 10.11.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/ஐ செலவு தொகையாக வரும் 20.07.2022ம் தேதியன்றோ அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 20.07.2022

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜூலை திங்கள் 08 நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/ 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.